அவசியம். அங்கு இருந்து போகிற பேருந்துகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. எனவே இதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு நவீனப் பேருந்து நிலையம் என்ற அளவுக்கு இந்தப் பேருந்து நிலையம் அமைப்ப தற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பேருந்து நிலையம், பெரியார் பேருந்து நிலையம் இரண்டும் அருகருகே, இருந்தாலும் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்திற்குச் சொந்தமானது திருவள்ளுவர் பேருந்து நிலையம் ; மதுரை நகராட்சிக்குச் சொந்தமானது பெரியார் பேருந்து நிலையமாக இருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்திச் சொல்லிய கருத்துகள் எல்லாம் பரிசிலனை செய்வதற்காக, சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு நேரடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு, எந்த வகையில் அந்தப் பேருந்து நிலையத்தைப் பொது மக்களுக்கு மேலும் சிறந்த வகையில் பயன்படுகின்ற முறையிலே அமைக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசித்து நல்ல முடிவாக எடுக்கலாம்.

சொரிமுத்து ஐயனார் கோவில்

*829—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முண்டந்துறை சரணாலயம் பகுதியில் இருக்கும் செக்போஸ்ட்டிற்கு மேற்புறம் அகஸ்தியர் அருவி சொரிமுத்து ஐயனார் கோவில் அமைந்துள்ளபடியால், அங்கு செல்லும் பொதுமக்களும் ரூபாய் இரண்டு கட்டணம் செலுத்தி போக வேண்டும் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(ஆ) நெல்லை மாவட்டம், பாபநாசம் அருகே, முண்டந் துறை சரணாலயம் பகுதியில் இருக்கும் சோதனைச் சாவடிக்கு மேல் பகுதியில் உள்ள அகஸ்தியர் அருவி, சொரிமுத்து ஐயனார் கோவில் ஆகிய இடங்களுக்குச் செல்ல நுழைவு கட்டணம் ரூ. 2 வீதம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், ஆடி அமாவாசை, திருவிழா நேரத்தில் ஒவ்வொரு வருடமும் 11 நாட்களுக்கு கட்டணம் வசூல் ஏதும் இல்லை.

1990 மார்ச் 30]

(ஆ) அகஸ்தியர் அருவியைப் பொறுத்தமட்டிலே இந்த சோதனைச் சாவடியை இன்னும் சற்று மேல் பகுதியிலே அமைத்து அருவிக்குச் செல்கின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என்பதைப் பரிசீலித்து வருகின்றோம். கூடிய விரைவிலே அதற்கான முடிவு மேற்கொள்ளப்படும். ஆனால், சொரிமுத்து ஐயனார் கோவிலுக்குச் செல்கின்றவர்களிடம் கட்டணம் வசூலிப்பதிலே எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கு பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரையார், சேர்வலார், காணிமுடிப்பு ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் செக்-போஸ்ட்டைக் கடந்து செல்ல வேண்டுமென்றால் அல்லது யாராவது அவர்களுடைய உறவினர்கள் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று வந்தால்கூட அங்கே செக்-போஸ்ட்டில் கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நீண்டகாலமாக செக்-போஸ்டில் வசூலிக்கின்ற கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி வருகிறார்கள். ஆகவே, அந்தக் கட்டணம் வசூலிப்பதை மட்டும் நிறுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, இது சரணாலயம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு அந்த வனப் பாதுகாப்பு—வன விலங்குச் சட்டத்தின் கீழ் சில கட்டுப்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சோதனைச் சாவடிக்கு மேல் செல்கின்றவர்களுக்கு இதிலே இந்த விதியைத் தளர்த்தி கட்டணம் வசூலிக்க வேண்டாமென்ற அந்தப் பரிசீலனை இல்லை என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காணி குடியிருப்பில் வசிக்கின்ற ஆதி வாசி மக்களுக்கு, ஆதிவாசி மக்கள் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் இருபது ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அவர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். முண்டந்துறை சரணாலயப் பகுதியில் தேசீயப் புலிப் பூங்கா அமைப்பதன் மூலம் அங்கே வசிக்கின்ற மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று அமைச்சரவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால் உறுதி அளித்தும்கூட அங்கேயிருக்கின்ற ஆதிவாசிகளின் நிலங்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இந்த வினாத் தொடர்பானது அல்ல.